Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.** 01/2020 |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW**– 13 | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | சந்திரசேகரன் |
| Father/Husband Name | : | பொன்னையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2021

முதல் விசாரணை–

நான் தற்போது கோவை மாவட்டம் குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு நான் மதுரை மாவட்டம் கருப்பாயுரணி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த சமயம் 13.12.2014 ம் தேதி காலை 07.45 மணிக்கு நான் பணியில் இருந்தபோது மதுரை மாவட்டம் வரிச்சியூர் கிராம நிர்வாக அலுவலர் விக்னேஷ்குமார் என்பவர் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று கருப்பாயூரணி காவல் நிலைய குற்ற எண். 628/2014 குவிமுச பிரிவு 174 படி ( சந்தேக மரணம் ) என்று வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த அச்சு படிவ முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ. 9. முதல் தகவல் அறிக்கையினை புகார் மனுவினை இணைத்து

கணம் மதுரை நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட காவல் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். இராமநாதபுரம் பஜார் காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.** 01/2020 |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW**–12 |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | நல்லதம்பி |
| Father/Husband Name | : | ஐயம்பெருமாள் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2021.

முதல் விசாரணை–

நான் தற்போது சென்னை மாநகர காவல் துறையில் திருவெற்றியூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு நான் மதுரை மாவட்டம் கருப்பாயூரணி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணிபுரிந்த சமயம் 13.12.2014 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு நான் பணியில் இருந்தபோது கருப்பாயூரணி காவல் நிலைய குற்ற எண். 628/2014 குவிமுச பிரிவு 174 என்ற வழக்கில் இறந்த போன அருண்குமார் என்ற ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி சிலைமான் காவல் ஆய்வாளர் கொடுக்கலான வேண்டுகோள் கடித்தைப்பெற்று மதுரை அரசு இராஜாஜி மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவத்துறை அதிகாரியிடம் வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தும் மேற்படி இறந்த அருண்குமார் என்பவரது

பிரேதத்தை அடையாளம் காட்டியும் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிரேத பரிசோதனை முடிந்த பிறகு இறந்த அருண்குமார் என்பவரது உடலை நல்லடக்கம் செய்யவேண்டி அவரது தகப்பனார் சுரேஷ் என்பரிடம் ஒப்பபடைத்தேன். பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட வெள்ளைக்கலர் சட்டை, பிஸ்கட் கலர் பேண்ட், சிவப்பு கலர் ஜட்டி, வாட்ச் பெண்டிரைவர், கர்ச்சிப் ஆகிய பொருள்களை மருத்துவர் எடுத்துக்கொடுத்ததை நான் பெற்று ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும்போது பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட வெள்ளைக்கலர் சட்டை, பிஸ்கட் கலர் பேண்ட், சிவப்பு கலர் ஜட்டி, வாட்ச் பெண்டிரைவர், கர்ச்சிப் ஆகிய பொருள்களை மருத்துவர் எடுத்துக்கொடுத்ததை நான் பெற்று ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல சொன்னேன். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் பிரேத பரிசோதனை பணிக்காக மருத்துவருக்கு உதவியாக செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரேதத்திலிருந்து எந்த பொருள்களையும் எடுக்கவில்லை என்றும் ஆய்வாளம் வசம் எந்த பொருளையும் ஒப்படைக்கவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.** 01/2020 |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW** – 11 | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர். கௌரிசங்கர் |
| Father Name | : | பாலகிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | இந்து |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2021.

முதல் விசாரணை–

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் உயிர்வேதியியல் துறையில் உதவி பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.12.2014 அன்று மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உடற்கூராய்வு துறையில் போதகராக பணியில் இருந்தபோது சிலைமான் சரக காவல் ஆய்வாளர் கொடுத்தனுப்பிய உடற்கூராய்வு வேண்டுகோள் கடிதத்தை கருப்பாயூரணி காவல் நிலைய முதல் நிலைக்காவலர் நல்லதம்பி என்பவர் மூலம் மதியம் சுமார் 2.30 மணியளவில் பெற்றுக்கொண்டு 22 வயது மதிக்கத்தக்க அருண்குமார் ஆண் பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள்விடுத்தார். பிரேத கூராய்வானது அன்றைதினம் மதியம் 2.50 மணிக்கு என்னால் ஆரம்பிக்கப்பட்டது. பிரேததின் உடல் முழுவதும் பிரேத விரைப்புத்தன்மை

காணப்பட்டது. பிரேதமானது சுமார் 22 வயது மதிக்கத்தக்க மித ஊட்டத்துடன் கூடிய ஆண் பிரேதமாக காணப்பட்டது. பிரேதத்தின் கை கால் நகங்கள் ஊதா நிறத்தில் காணப்பட்டது. பிரேதத்தின் வலது வாய் ஓரத்தின் வழியாக இரத்தத்துடன் கலந்த நுரை கீழே வழிந்த நிலையில் காணப்பபட்டது., இறப்பிற்கு பின் ஏற்பட்ட தோல் உறிதல் 3 செ.மீ. X 2. செ.மீ என்ற அளவிலாக வலது பக்க மேல் மார்பறை அருகே காணப்பபட்டது. இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் கீழ்வருமாறு காணப்பட்டன.

1. கீழ் உதட்டின் அருகே இடது பக்க கண்ணத்தில் 3 செ.மீ x 2 செ.மீ. என்ற அளவிலான ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.,

2. கீழ் உதட்டின் அருகே வலது பக்க கண்ணத்தில் 2 செ.மீ x 1 செ.மீ. என்ற அளவிலான ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

3. தலையை கூராய்வு செய்ததில் தலைத்தோளின் அடியில் 6 செ.மீ x 5 செ.மீ. என்ற அளவிலான ஒரு கன்றிய காயம்காயம் வலது பக்க தலைப்பகுதியில் காணப்பட்டது.

4, மூளையின் மேல் அறைகளில் எந்தவித ரத்த சீற்றமும் காணப்படவில்லை.

5. பிரேதத்தின் அங்கம் முழுவதும் ஆங்காங்கே மேலெழுந்தவாரியாக கீறிப்பார்த்ததில் வேறு எந்தஒரு காயமும் காணப்படவில்லை.

6. இதர தோற்றங்கள் வயிற்றறை காலியாக காணப்பப்டடது, நெஞ்சரை காலியாக காணப்பட்டது. இதயத்தின் மேல் அறையில் 15 மிலி அளவிலான வைக்கோல் நிற திரவம் காணப்பட்டது. இதயத்தின் வலது அறைகளில் இடது அறைகள் காலியாகவும் காணப்பட்டன. இதயத்தமணி சீராக இருந்தது. நுரையீரல்கள் இரத்தச் செறிவுடன் காணப்பட்டன. மூச்சுக்குழாய் சீராக இருந்தது. நாவடி சீராக இருந்தது. வயிற்றில் 150 கிராம் என்ற அளவிலான ஒரு பழுப்பு நிற திரவம் நெடியுடன் காணப்பட்டது. கல்லீரல் மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் வெட்டுத்தோற்றத்தில் ரத்தச் செறிவுடன் காணப்பட்டது. சிறுகுடலில் 20 மிலி அளவிலான பழுப்பு நிற திரவம் நெடியுடன் காணப்பட்டது. சிறுநீரகப் பை காலியாக காணப்பட்டது. உள்ளுருப்பகள் இராசாய பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. இடது மற்றும் வலது நுரையீரல்கள் பகுப்பாய்விற்காக அனுப்பப்பட்டன. இறுதி அறிக்கை மேலே குறிப்பிட்ட நபர் MONOCROTOPHOS POISONING ( பூச்சிக்கொல்லி மருந்து ) அதனால் இறந்திருக்கலாம்

என்று சான்று வழங்கப்பட்டுள்ளது. இறந்த நபருக்கு கட்டாயப்படுத்தி ஊற்றும்போது மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. பிரேத பரிசோதனை அறிக்கை அ.சாஆ. 7. இறுதி அறிக்கை அ.சா.ஆ. 8. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u> –

1 வது காயம் ரத்தத்துடன் கலந்த நுரை வழிந்ததாக சொல்லப்படுவது ஒருவர் பூச்சி மருந்தை உட்கொள்வதால் கூட வரலாம் என்றால் சரிதான். இறப்பிற்கு முன் ஏற்பட்டதாக சொல்லப்படும் 1, 2 காயங்கள் கடினமான பொருளின் மீது மோதினால் கூட ஏற்படலாம் என்றால் சரிதான். 3 வது காயமான கன்றிய காயம் தலையின் உட்பகுதியில் இருந்தது அதற்கு இணையான வெளிக்காயங்கள் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையில் பிரேத பரிசோதனைக்கு முன்பாக எத்தனை மணி நேரத்திற்கு முன்பு இறப்பு ஏற்பட்டிருக்கும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.